தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௬	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௧ விகிருதி—புரட்டாசி 1950—செப்டம்பர்	மலர் ௬

பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து 20 ஆவது பட்டத்தில் வீற்றிருந்து அருட்செங்கோல் செலுத்தும் குருமகா சந்நிதானம் அருட்டிரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் திருப்பதிகள் காணவும் சைவப் பெருமக்களுக்குக் காட்சிதந்து சைவத் திருநெறிக் கொள்கையைப் பரப்பி மக்களை நல்வழிப் படுத்தவும் திருவுளங்கொண்டு விகிருதி, ஆவணி, ௨௨ ஆம் நாள் வியாழக்கிழமை வைகறைப் பொழுதில் திருவாவடுதுறையினின்றும் எழுந்தருளி திருவிடைமருதூர் அடைந்து அங்குச் சில பகல் தங்கி ஆவணி ௨௰௭ ஆம்நாள் வைகறைப் பொழுதில் அங்கிருந்தும் போந்து புதன்கிழமை காலை திருவலஞ்சுழியிலும், திருவேரகத்திலும் இறைவனை வணங்கிக் கவித்தலஞ்சேர்ந்து குருபூசை முடித்துஅன்றிரவு அங்குத் தங்கி மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் அங்கிருந்தும் எழுந்தருளி வடகுரங்காடுதுறை, திருப்பழனம் கண்டு தருமையாதீன அருட்டிரு மகாசந்நிதானம் அவர்கள் ஆணைப்படி அடியார் குழாங்கள் எதிர்கொண்டழைப்ப அவர்கள் வேண்டுகோளின்படி திருவையாறடைந்து மறுநாள் வெள்ளிக்கிழமை மூத்த பிள்ளையார் வழிபாடுசெய்து குருபூசை ஏற்று ஐயாறப்பனையும் அறம் வளர்த்தாளையும்

தொழுது இரவில் ஊர்வலம் போந்து ஆவணி ௩௰௧ ஆம் நாள் சனிக்கிழமை பிற்பகல் ஐயாற்றினின்றும் எழுந்தருளி திருநெய்த்தானத்து இறைவனை வணங்கித் திருக்காட்டுப் பள்ளி வழியே கோவிலடி யடைந்து புரட்டாசி முதல்நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் திருவானைக்காவில் அடியார் குழாம் எதிர்கொண்டு வணங்க அணைந்தருளித் தம் ஆதீன மடத்தில் எழுந்தருளினார்கள். திருவானைக்காவில் ஒரு கிழமை தங்கி அடியார்கள் வழிபாடுகளை ஏற்றுப் பின்னர் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு எழுந்தருளு வார்கள்.

• • • • •

திரு. மறைமலையடிகளார் மறைவு.

தமிழ் நாட்டுப் பேரறிஞர் மறைமலை யடிகளார் *15—9—50* ல் மறைந்தது குறித்து, *18—9—50* மாலை கரந்தைத் தமிழ்ப்பெருமன்றத்தில் இரங்கற் கூட்டம் நிகழ்ந்தது. அப்பொழுது சங்கப் பேரன்பர்களும் ஆசிரி யர்களும் மாணவர்களும் குழுமி யிருந்தனர். புலவர் கல்லூரித் தலைவர் உ. பழநி, B. O. L. (Hons.) அவர்கள் தலைமை வகித்து, அடிகளாரின் வரலாற்றையும், மும் மொழிப் புலமையையும், சிறந்த பண்புகளையும், எடுத்துக் கூறி "அன்னாரின் மறைவு தமிழ் நாட்டிற்குப் பெரும் இழப்பாகும்" என்று கூறினார்கள். பின்னர் அவர்களை யடுத்துப் புலவர் கல்லூரி விரிவுரையாளர்களாகிய திரு. அடிகளாசிரிய ரவர்களும், திரு. மு. சடகோப ராமா னுசம் பிள்ளையவர்களும், உயர்நிலைப் பள்ளித் தலைவர் திரு. S. T. அரசு M. A.; L. T.; அவர்களும், மேற்படி பள் ளிக்கூட ஆசிரியர் திரு. பாண்டுரங்கம் B. A. அவர்களும், புலவர் கல்லூரி மாணவர் திரு. வேங்கடாசலம், திரு. இலக்குவன், திரு. சிங்கப்பெருமாள் என்பவர்களும்

அடிகளாரின் பண்புகளையும் வாழ்க்கைக் குறிப்புகளையும் எடுத்துக்கூறி வருத்தம் தெரிவித்தனர். பின்னர் கூட்டத்தினர் எழுந்து நின்று அடிகளாரின் உயிர் நிறைவைக் குறித்து ஆண்டவனுக்கு மௌன வணக்கம் செலுத்தி, அடிகளாரின் குடும்பத்தினர்க்கு ஆறுதற்செய்தி தெரிவித்துக் கொண்டனர்.

* * * *

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை மறைமலை அடிகள் பிரிவு இரங்கற்கூட்டம்

16-9-50 காலையில் பாடசாலையைச் சேர்ந்த மாணவர் இல்லத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் பி. ஓ. எல்., எம். லிட்., அவர்கள் தலைமையில் கூட்டம் நடந்தது. திரு. தணிகை அரசு, தமிழாசிரியர் கு. நடராச பிள்ளை, வித்துவான் மா. சுப்பிரமணியம் ஆகியோர்கள் பேசிய பிறகு கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

“தமிழ் நாட்டின் சிறந்த அறிஞரும், தமிழ், ஆங்கிலம், ஆரியம் முதலிய மொழிகளைத் துறைபோகப் பயின்றவரும், பல ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியரும், தமிழ் நாட்டுக்குத் தேவையான ஆக்கப் பணிகளை வற்புறுத்தி வந்தவருமான பல்லாவரம் பொதுநிலைக் கழகத் தலைவர் மறைத்திரு. **மறைமலையடிகளார்** 15—9—50ல் மறைந்தமை குறித்து இக்கூட்டம் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.”

துயரம்.

சென்ற சில நாட்களுக்குள் தமிழறிஞர்களும், தமிழ்த் தொண்டர்களும், நம் சங்க அன்பர்களுமான பல பெரியார் களது மறைவு நமக்குப் பெருந்துயரையும், மனத்தளர்ச்சியையும் உண்டுபண்ணுவதாயிருக்கிறது. நாம் இழந்த பெரியார்கள் தமிழ் மணிகளும், தமிழர் மணிகளும், தமிழ்நாட்டு மணிகளும் ஆகிய விளக்கங்களானவர்கள். இவர்கள் பிரிவு ஈடு செய்யக் கூடியதன்று.

சென்ற ஐம்பதாண்டுகளின் மேலாகச் சைவத்துறையிலும், தமிழ்த்துறையிலும், ஆங்கிலத்துறையிலும், ஆரியத்துறை யிலும் தமிழர் மேம்பாட்டினும் திளைத்துப் பல்வகைய ஆராய்ச்சி களில் ஈடுபட்டுத் தமிழிற்கும், சைவத்திற்கும் அருந்தொண் டாற்றிப் புகழ்பெற்று வந்த அருமைத் தமிழ்மகனார் மறைமலை யடிகளார் பிரிவு தமிழ் மக்களெல்லாரையும் துணுக்குறச் செய்தது. நம் சங்கத்திடத்து அளவிலா அன்பும் பற்றும் கொண்டிருந்தவர்கள் மறைமலையடிகளார். நம் சங்கத் தொண் டின் திறங்களையும் ஆராய்ச்சி நலங்களையும், பொதுப் பணிச் சிறப்புகளையும் பாராட்டிப் புகழ்ந்திருந்தவர்கள். நம் சங்கத்து அவது ஆண்டு விழாவில் தலைமைதாங்கித் தமிழர்களுக்கு அறி வுரை கூறி விழாவை சிறப்புற நடத்திவைத்த திறன் இன்னும் நம் நினைவில் இருந்து வருகிறது. அடிகளாரது திறத்தையும் தொண்டையும் பொதுவாகத் தமிழ் உலகமும் சிறப்பாகச் சைவ உலகமும் பாராட்டத் தவறிவிட்டது என்றே நாம் சொல்வோம். அவர்களது சைவ ஆராய்ச்சியும் சைவ நெறியை பரப்புவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியும் உழைப்பும் அளவிறந்தன. அவர்களுடைய பொருள் வசதிகளை நோக்க மிகுதியானவை என்று சொல்லலாம். சைவப் பெருமக்களது உதவி மட்டும் அவர்களுக்குக் கிடைத்திருக்குமேல் அவர்கள் சைவநெறியைப் பலபடியாக மேம்படுத்தி யிருப்பார்கள். தமிழ் மக்களது ஆதரவு கிடைத்திருந்தால் நம் தமிழ்த்தாயின் சிறப்பு இன்னும் பல மடங்கு மிகுந்திருக்கும்.

சைவ சித்தாந்த மகா சமாசமும் அதன் வெளியீடாகிய சித்தாந்தமும் தோன்றியதற்கு முதற் காரணராய் இருந்தவர்கள் அடிகளாரேயாவார்.

இத்தகைய சைவப் பெரியாரை அருமைத் தமிழ்மகனை அரிய பேரறிஞரை தண்டமிழ்த் தொண்டரை இழக்க நேர்ந்ததனல் நாமெல்லோருக்கும் சிறப்பாக திருவாளர் மறை திருநாவுக்கரசு முதலான அவர் குடும்பத்தாருக்கும் உண்டான ஆற்றெருணுத்துயரை ஆற்றியிருக்கும் வன்மையை இறைவன் அருள்வாஞக.

2. நம் சங்க அன்பரும் செந்தமிழ்க் கொரு குடிதாங்கியும் வீரத்தமிழ் மகனும் ஆன சேலம் அ. இராமசாமிக் கவுண்டர் அவர்கள் நிரம்பா வயதில் நம்மை விட்டுப் பிரிந்தது நம் நெஞ்சம் திடுக்கிடச்செய்தது. ஆங்கிலப் புலமையும் தமிழ்ப் புலமையும் ஒருங்கே நிறையப்பெற்றுத் தண்டமிழ்த்தொண்டு கைவரப்பெற்று அரும் பணியாற்றி வந்த பெருந் தகையாராகிய நம் கவுண்டர் அவர்கள் நம் சங்கத்திற்கு பன்முறை வந்து சிறந்த சொற் பொழிவுகளாற்றி மகிழ்ந்தார்கள். சேலம் நகராண்மைக் கழக உயர் நிலைப்பள்ளியில் பணியாற்றி அதனை முதற்தரக் கல்லூரியுமாக்கி அதன் தலைவராயிருந்து திறம்பட நடத்திச் சிறப்பித்த பெருமை நம் கவுண்டர் அவர்களது தனி உரிமையாகும். தமிழ்த் துறை தழைத்து, தமிழின்பம் துய்த்து அவ் வின்பம் துய்க்க 'சேர வாரும் செகத்தீரே' என்று கூவியழைத்த பெருமை நம் கவுண்டர் அவர்களுக்குப் பொருந்தும். இத்தகைய பெருமை வாய்ந்த நம் கவுண்டர் தமிழ் மக்களையும் சுற்றத்தாரையும் விட்டு மறைந்தது யாவர்க்கும் ஆற்றெருணுத் துயரம் தருவதாகும்.

3. முத் தமிழ் அறிஞரும் தமிழிசைப் புலவரும் நம் சங்க அன்பரும் ஆகிய திருவனந்தபுரம் தி. இலக்குமண பிள்ளை யவர்கள் காலஞ் சென்ற செய்தி பெரு வருத்தம் தருவதாயிற்று. பிள்ளையவர்கள் இசைக்கல்லூரி ஒன்று நிறுவிப் பேராசிரியராயிருந்து பலருக்கும் தமிழிசை கற்பித்து தமிழிசை வல்லுனராக்கி சிறப்பாக இசைத் தமிழுக்கு ஆற்றிய தொண்டு

போற்றுதற் குரித்தாம். நம் சங்க ஆண்டுவிழாக்களுக்கு மகிழ்வுடன் வந்திருந்து தமிழிசை குறித்த சொற்பொழிவுகளாற்றித் தம் மாணவ மாணவிகளுடன் தமிழிசையை இயக்கிக் காட்டி தமிழர்களுக் கெல்லாம் மகிழ்ச்சி யளித்து வந்தார்கள். தமிழ்ப் பாட்டுகள் இசைக் கொத்துவாரா என்ற குருட்டுக் கொள்கையைப் பொய்ப்பித்துத் தமிழிசைப் பெருமையை நம் தமிழ்ப் பெருமன்றத்தில் நிலை நாட்டித் தாம் இயற்றிய இசைத் தமிழ் நூலை அரங்கேற்றி வியப்பித்த நிகழ்ச்சி யாவருக்கும் நினைவிலிருக்கலாம். வயது முதிர முதிர தமிழிசைப் பற்றும் ஆர்வமும் ஊக்கமும் முதிர்ந்து வந்த பெருந்தகையார். இத்தகைய சிறந்த பெரியார் மறைவு தமிழுலகத்திற்கும் இசை உலகத்திற்கும் பேரிழப்பாகும்.

4. நாகபட்டினத்தை யடுத்த மஞ்சக்கொல்லையில் சிறந்த வாழ்க்கை நிறைந்த செல்வமும் செந்தமிழ் பற்றும் திருநெறிச் சைவ ஒழுக்கமும் நிறையப்பெற்று வாழ்ந்து வந்த நம் சங்க வாழ்நாள் உறுப்பினர் இராமசாமி முதலியார் அவர்கள் மறைவு பெரிதும் வருந்தத் தக்கதாகும். ஆடம்பர மில்லாத உண்மை யன்பும், பகட்டற்ற பண்பும் இவர்களது சிறந்த குணங்களாகும். சுற்றந்தழாலும், உற்றூர்ப் பிணித்தலும், கற்றூர்க் குதவுதலும் இவர்கள் நற் பண்புகளுள் சிலவாம்.

5. நம் சங்கத்திடத்து உண்மை யன்பும் பற்றும் கொண்டிருந்த பேரறிஞர்களாகிய சுரேந்திரநாத ஆரியா அவர்கள் சின்னுள் நோய்வாய்ப்பட்டிருந்து மறைந்ததும் கணிதப் பேரறிஞரும பேராசிரியருமாகிய சிவசங்கர நாராயண பிள்ளை யவர்கள் எதிர்பாராது துடுமென மறைந்ததும் நமக்கெல்லாம் ஆற்ருெணுப் பெருந்துயர் விளைத்தன. இப்பெருமக்கள் முறையே தத்துவ நெறியிலும், கணிதத் துறையிலும் உலகப்புகழ் பெற்ற பெருஞ்சிறப்பினராவர். சிவசங்கரநாராயண பிள்ளையவர்கள் பெருமை பாராட்டப்பெற்று அயல்நாட்டுப் பல்கலைக்கழகத்தார் அழைப்புக்கிணங்கி பணியாற்றச்சென்ற வழியில் தம் இள வயதில் எதிர்பாராதமுடிவுக்கு உள்ளானது துயரினம் துயர் தருவதாகும்.

பட்டகாலிலே படும் என்றபடி சிறு பொழுதில் இத்தனை அன்பர்களை இழக்க நேர்ந்த தமிழ் மக்களது நிலைமைப் பெரிதும் இரங்கத்தக்கதாகும். "எம் செயலாவது யாதொன்றுமில்லை இனி தெய்வமே உன் செயலே என்று உணரப்பெற்ருேம்" என்று திருவருளை நினைந்து ஆற்றியிருப்பதல்லாது வேறென் செயக்கடவோம்.

சங்கம் கண்ட சமதர்மம்

"செங்கோ"

A. ஞானரத்னம், சாலைத்தெரு, இராமநாதபுரம்.

உலகில் பல்வேறு நாடுகள் பல நூற்ருண்டுகளுக்கு முன் தனி மனிதன் சக்திக்கும், தான் தோன்றித் தலைவர்களின் சட்டத்திற்கும், மன்னுதி மன்னர்களின் மிரட்டல்களுக்கும் அடிமைப்பட்டு அவர்கள் எதேச்சாதிகாரத்தை மட்டுப்படுத்தும் அறிஞர்கள் அமைந்த அவையற்று அல்லற்பட்டவதியுற்றன இன்னும் சில நாடுகள் ஆட்சி முறையென்ருல் என்ன என்பதைக் கூட அறிய ஆற்றலற்று அமைதியற்ற நிலையில் நின்றியங்கின. அக்காலங்களுக்கு முன்னரே, நம் தமிழகத்தில், மொழியின் பெயரால் அரசன் தலைமையில் அறிஞர்கள் கூடி அமைத்ததே தமிழ்ச் சங்கங்கள் என்பதை யாவரும் அறிவர். வேறெந்த நாட்டிலும் எம் மொழிக்கும அமைக்கப்படாத சங்கம் தமிழ்மொழி மட்டும் காண அவசியம் என்ன? தமிழ் மொழி தழைக்க வேண்டிச் சங்கத்தை நாடிற்ரு? அல்லது சங கம் நிலைக்கவேண்டித் தமிழ்மொழியைத் துணைக்கொண்டதா? மொழியைக் காக்க ஒருகுழு அவசியமா? அல்லது குழுவை அமைக்க ஒரு மொழி அவசியமா? என்பனபோன்ற வினுக்கள் எழுகின்றன. இவ் வினுக்களுக்கு விடையிறுப்பான் வேண்டிப் பேராசிரியர் கூறுகிருர் "காவலனுகிய தந்தை கனிவான ஆதரவுகாட்ட, நாவலனுகிய தாய் அரிய சொற் செல்வங்களைப் பெற்றெடுத்து, சுவையென்னும் அமுதூட்டி, சபையாகிய மடியிலே தாலாட்டி வளர்த்தாள்" அங்ஙனம் பாராட்டப் பட்ட குழவி பருவமாறுதல்களிலும், காலசுழற்சியிலும் சிக்கிச் சிதைந்து சீர் இழக்க விட்டுவிடவில்லை. தந்தையின் கண்டிப்பில், காவலர்களின் கண்காணிப்பில் கவனமாய் வளர்த்தனர். களைகள் முளைத்தால் உடனே களைந்தனர். குற்றம் கண்டால் குறடுகொண்டு குடைந்தெடுத்தனர். வேண்டாத வளர்ச்சியை ஒட்டவெட்டினர். இத்தனைகண்டிப்பில் வளர்ந்தாலும் கால வெள்ளத்தில் பேணிய பெருமையை இழந்து விடாதிருக்குமா என்பதைச் சோதிக்கப் புகுந்தான் ஈசன்! நெற்றிக்கண்ணையும் திறந்தான்! அப்போதும் குற்றம்கொள்ளாது குறையை ஏற்காத இயல்புபெற்று வளர்ந்தது. வம்பு கண்டால் வசையுடன் கண்டித்தனர். ஆனல் இனிமை கண்டவிடத்து ஏற்று, புதுமை கண்டால் புகழ்ந்து, பெருமைகண்டால் பொன்னையும் மணிகளையும்

பரிசளித்து, அரிய கருத்துக்களெல்லாம் தோன்றும்போதெல்லாம் நாடு நகரங்களையும் கண்ணுக்கெட்டிய தூரம் கொடுத்துப் போற்றி வந்தனர். இங்ஙனம் வளர்ந்துவரும் சபைக்கு ஆண்டவன் முதல் அரசன்வரை அவைத்தலைவராயினர். நாட்டிலுள்ள நாவலரும், பாவலரும் எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி தங்கள் சுயஅறிவு ஒன்றையே தகுதியாகக்கொண்டு அவை அங்கங்களாயினர். மொழியை வளர்த்தனர். அதை என்றும் இனிமையும், இளமையும் உடையதாக்கினர். அதைக் கருவியாகக் கொண்டு பொருளும் இன்பமும் பின்தொடர அறத்தை முதன்மையானதாக அமைத்து, ஆண் பெண் என்ற இருபெரும் மக்கட்பிரிவும், சமஉணர்வுகொண்டு தரணியில் வாழ இலக்கணம் அமைத்தனர். மக்கள் செய்தகு தொழில் கூறி அத்தொழில் செய்வோர் ஒழுகத்தக்க அறநெறி வகுத்தனர். அங்ஙனம் வகுத்த தொழில் இயல்புகளில் வேத வணிகர் பற்றிப் பட்டினபாலையில் கூறிய செய்யுள் ஒன்றை மட்டும் கூறுகிறேன்.

> கடுவுவின்ற நன்னெஞ்சினோர்
> வடுவஞ்சி வாய்மொழிந்து
> தமவும்பிறவும் ஒப்பநாடிக்
> கொள்வதூஉம் மிகைகொளாது
> கொடுப்பதூஉம் குறைகொடாது
> பல்பண்டம் பகர்ந்துவீசும்

என்பதே அப்பகுதி. அக்கால வணிகரது நினைப்பு, வார்த்தை, செயல், அஃதாவது மனம், வாக்கு, காயமாகிய திரிகரணமே இணையற்ற சம உணர்வு கொண்டு தூய்மை உடையதாய் இருப்பின், மற்றோர் தொழில்முறை பற்றி விரித்துக் கூறும் செயல் வேண்டற்பாலது எனவிடுகின்றேன்.

இங்ஙனம் அறநெறி, தொழில்முறை, ஒழுகலாறுகளை வகுத்து நம் தமிழ்மொழி வாயிலாக நாட்டிற்களித்தது நம் சங்கம். அங்ஙனம் வகுத்த அறநெறியில் அமைதியுடன் ஒழுகினர் மன்னர்களும் மக்களும். மன்னர்கள் மக்களுக்குச் சமநீதியைச் சரிக்கட்டுவதில் தாமென்றும் பிறரென்றும் பார்த்தார்களில்லை. மக்களும் தமக்கென வகுத்த தருமத்தில் நிலைத்து நீதியைப் பகிர்வோன் நிலை வழுவாதிருக்க பெரும் தொண்டாற்றினர். மன்னவனுக்கும், மக்களுக்குமிடையே இருந்து இருவரும் நீதியில் நிலைத்திருக்கும் பெரும் பொறுப்பு ஏற்றுப்பணியாற்றியது சங்கம். மாபெரும் மக்கள் சக்தியும் மன்னவனின் படைப் பலமும் ஒன்றையொன்று ஒரு போதும் மோதாதபடி, கற்றிருந்த

(195 ஆம் பக்கம் பார்க்க.)

உலக முப்பெருங் கவிகள்

டாண்டே - இளங்கோ - ஷேக்ஸ்பியர்

(வேலூர்க் காரழகன்.)

(முற்றொடர்ச்சி: துணர் உகூ, மலர் ரு, பக்கம் 152)

நடிப்பை முன்னிறுத்தி நாடக இயலை அவனிக்களித்த வர்கள் கிரீக் நாட்டினர் என்றாலும், கருத்தை முன்னிறுத்தி அதற்காக நடிப்பைத்தோற்றுவித்த உயர் தனிச்சிறப்பு தமிழர்களிடத்தும், ஆரியர்களிடத்தும், ஆங்கிலேயர்களி டத்தும் இருத்தல் வெள்ளிடைமலை. வாழ்விலுறும் மகிழ் வையும் அவலத்தையும் விளக்கி வரலாற்றைக் கூறுவதற்கு நாடகத்தை முதன்முதலில் கையாண்ட உயர்தனிச் சிறப்பு அடிகளாருக்கே உரியது.

திருமணத்தைக் கூறும் புகார்க் காண்டத்தையும் - மர ணத்தைக் கூறும் மதுரைக் காண்டத்தையும் - வரலாற் றைக்கூறும் வஞ்சிக் காண்டத்தையும் கூர்ந்து பார்க்கு மிடத்து, சிலப்பதிகாரம் முழுவதுமே முழு நாடக நூலென்று கொள்ள இடந்தராமலில்லை. அஃதுடன் ஒவ் வொரு பகுதியிலும் தமிழருடையதொன்மை வரலாற்றை விளக்கியதின் அருமையை எண்ணுங்கால் ஏமமுறாமலி ருக்க முடியவில்லை. புகார்க் காண்டத்தில் இன்பத்தின் பகுதியைக் கூறினும் திருமாவளவன் வடநாடாண்ட பெருமையை இந்திர விழாவிலியம்பி இருப்பதாலும், மது ரைக் காண்டத்தில் மரணப்பகுதியைக் கூறினும் குமரி நாட்டைக் கொடுங்கடல் உட் கொண்டதையும் வட இமயத்துடன் கங்கையைப் பாண்டியன் ஆண்டதையும் அறைந்திருப்பதாலும், வஞ்சிக் காண்டத்தில் கண்ணகியின் வீடுபேற்றை உரைப்பினும் தமிழர் வட நாட்டைப் படை யெடுத்துவென்ற பெருமையைப் பகர்ந்திருப்பதாலும் இளங்கோ அடிகள் யாத்த சிலப்பதிகாரம் சிறப்பதிகார

மாயிலங்குவதுடன் கற்புக்கடம்பூண்ட கண்ணகியைப் பொற்புடைத் தெய்வமென வழுத்தும் பெருமை என்ன !

இன்பம் - இன்னல் - வரலாறு - கலையியல் இன்னபிற வற்றை இனிதே இயம்பி மூவேந்தரையும் முத்தமிழையும் மூன்று நாடுகளையுங்கூறி மக்கள் தொல்லை கொடுக்காமலும் கவலை அளிக்காமலும் வாழவேண்டுமென்றும், கள்ளும் காமமும் - களவும் - உயிர்கொலையும் - ஊன் உண்ணலும் விலக்க வேண்டுமென்றும், நன்றி மறவாது அறவினை ஓம்பி அறப்பணியாற்றி இறைவனை உணரவேண்டுமென்றும் உயர் உரைகள் உரைத்த இளங்கோ அடிகளின் இனிய அருள் மொழிகளுக்கு ஈடுண்டோ!

இலக்கியப்பிழம்பென இலங்கிக் கலைமணிமுடி யணிந்து அறிவியல் ஒளிஏந்தி அனைவருள்ளத்திலு மிறவா திலங்கும் பெற்றிமைஎய்தி உலகஇலக்கிய அரங்கில் உயர்வுடனோங்கிப் பீடுடன்பரவித் தனிப்புகழெய்தித் தக வுடன் திகழும் ஷேக்ஸ்பியருக்குப் போட்டியிடுபவரிப் பாரி லெவருமில்லை. இவரரும்பிய நாள்தொட் டின்றுவரை இவர் தம்நூல்கள் உலகில் நான்குபக்கங்களிலும் வெள்ளம் போல் ஓடிப்பாய்வதைப்போன்று வேறு எந்நூலும் பாய்ந் ததில்லையாதலால் இவரெய்திய மங்காப்புகழுக்கு எங்கும் ஈடில்லை. எச்சமயத்திற்கும், எந்நாகரீகத்திற்கும், எந் நாட்டுக்கும் கட்டுப்படாமல் திட்டமிட்டு வரையறுத்த எல்லைக்கும் சிக்காமல் வாழ்விலுறுமின்ப இன்னல்களைச் சொல்லோவியத்தில் சிறந்த செய்யுளியலில் சித்தரிக் கையில் உண்மை உணர்ச்சி, உயரிய கலை எழிலுடன் திகழ் வதால் படிப்போ ரனைவரும் பாத்திரங்களாகவே இலங்கும் பெற்றிமையைக் காணும்பொழுது ஷேக்ஸ்பியரின் பெரு மையைப் பகர வார்த்தை இல்லையே. ஹோமர்-டாண்டே- கதே-இளங்கோ-காளிதாசன்-ருபாயத்-இன்னபிற பெரும் புலவர்கள் பாரில் பெரும் புகழ் எய்தினும் ஷேக்ஸ்பிய ரைப் போன்று என்றும் வளர்ந்து—பெருகும் புகழ் எய்தி னார்களில்லை. பல் வேறுபட்ட மக்களினியற்கை நிலைகளை உள்ளவாறே உரைக்குந் தனித்திறமை எய்திச் சிற்பத்தில் சிறந்த பிடியாசையும்-ஓவியத்தில் சிறந்த ரபேலையும் நிகர்க்கும் பெருமை என்னே !

அரிய ஆங்கில இலக்கியத்திற்குக் கருவூலமாயிலங்கிய ஷேக்ஸ்பியர் 1564-ஏப்ரல் திங்களில் ஸ்டார்ட்போர்ட் ஆவனில் பிறந்து இளமையில் கல்விபயின்று 18ம் வயதில் 26 வயதுடைய அன்னி ஆத்வே என்ற நங்கையை மணந்து, சட்டத்தையும் மருத்துவத்தையும், தத்துவத்தையும், வரலாற்றையும், வாணிபத்தையும் அறிந்து, விவிலியத்தை நன்கு பயின்று, பல நூல்களை நுணுகி யாராய்ந்து, நான்கு மொழிகளைக் கற்றுணர்ந்து பல துறைகளையும் துளக்கமற அறிந்து உயர்வுடன் விளங்கினர். தொன்மை இலக்கியப் பூங்காவாயிலங்கும் ஹோமரையும், இதாலியிலரும்பிய இன்ப இலக்கிய மலர்வனத்து எழில்மலர்கள் மணத்தையும் அவண் ஓடும் அறிவியல் அருவியையும் இனிதே துய்த்துப் பேரறிஞர்கள் கூட்டுறவையும் பெற்றுக் கலைத்துறையில் முதன்மைஎய்திக் கவித்துறையில் வெற்றியைக் கண்டார். ஆங்கில மொழியைச் செய்யுளியலில் வளம்படுத்திய பெருமை மார்லோவுக் குரியதைப் போன்றே கலையியலாலும் இன்ப இன்னிசையாலும் ஆங்கிலமொழிக்கு உயர்வாம் அமைதியை நல்க எண்ணியதை எண்ணியவாறு இசைப்படுத்தி இயம்ப உயரிய உரிமையைத் தேடித் தந்தார் ஷேக்ஸ்பியர் இவர் காலத்திலுயர் நிலை எய்திய ஆங்கில இலக்கியத்தை விரைந்திழுத்துப் பெருவெள்ளமாக்கி அவ்வெள்ளத்தில் பல பேரறிஞர்களை உயர்நிலைக்கு அழைத்துச் சென்ற உயர் பெருமை இவருக்கே உண்டு.

பல பெருங் கவிகள் குறித்த ஒரு காலத்தே உயர்வுடனிலங்கி பின்னர்க் காட்சி மன்றத்திலங்கும் வியப்புறும் பொருள் போலல்லாமல் எக்காலத்தும் எல்லா நாடுகளுக்கும், எல்லாத் துறைகளுக்கும் ஏற்றவராக ஏமமுடனிலங்கி ஏனையோரையுமாழச் சிந்திக்கவைத்து, வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கு ஊழ்-வினை-கடவுள் தண்டனை என்று பிணைக்காமல், காரணத்தையும் கூறுமல் அனைத்திற்குமப் பாற்பட்ட விடத்திற் கழைத்தேகி நிகழ்ச்சிகளின் விளைவால் நன்மை தீமைகளை அறிவித்து அனைவரையும் ஓர்ப்புக் கிரையாக்கும் பெருந்தகைமைக்கு இவ்வவனியில் ஈடு இல்லை. இவர் மனம் தெளிவடைந்து விளக்க மெய்தியமையால் மந்திரக் கண்ணுடியில் உலகம் தெரிவதைப்

போன்று இவர் மனக் கண்ணுடியில் உலகைக் கண்டாரெனினும் உலகச் சிக்கலின் மூலையிலிருந்து விரிந்த மனப் பான்மையுடன் அனைத்தையுமுணர்ந்து தனி மனிதனுக்கும் உலகுக்குமுள்ள தொடர்பை நன்கறிந்து உலகில் இவர் ஒருவராக இல்லாமல் உலகமாகவே இவர் இருந்தாரெனினும் அவலமும் தொல்லையும் இவருக்கு மிக அண்மையிலில்லாமலிருந்ததில்லை. கைவிடப்பட்டு-நழுவவிடப்பட்டு-முறியடிக்கப்பட்டுக் கவலைக் கடல் கடப்பவனுடைய கொடுமையையும் தோற்கடிக்கப்படும் தொல்லையில் தோய்ந்த துன்பத்தை இவர் யாத்த சானெட்சில் காணலாம்; இவருடைய உள்ளப்புயலையும் துன்பத்துயரையும் துளக்கமற சானெட்சில் விளக்குகையில் மணிமுடி தாங்கிய மன்னவன் தலையிலும் தொல்லை உறைந்து கிடக்காமலில்லை என்ற அவர் தம் பொன் மொழி நினைவுக்கு வராமலில்லை.

வையகத்தில் தோன்றிய தகவுடைய அறிவியல் இயற்கைப் புலவர்களுள் எவரும் கையாளாத, கழிந்தது கழிய, விலக்கியது விலக, ஏற்றுக்கொள்ளவல்ல இருநூற்றுமுப்பத்தாறு பாத்திரங்களைப் பகர்ந்த பெருந்தகைமை ஒன்றிற்கே வையகம் ஷேக்ஸ்பியருக்கு வணக்கம் செலுத்துகிறது. ஒவ்வொரு பாத்திரங்களின் பண்புகளை நன்குணர்ந்து நவிலுகையில் யாவரும் அவ்வுணர்ச்சிபெற்று, இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல் இவர் நாடகமும் அதைப் படிப்பவரும் ஒன்றி விடுகின்றனர்; இவ்வொன்றிற்கே முழுமை எய்திய வையகக் கவிகளனைவர்க்கும் ஷேக்ஸ்பியர் இன்றளவும் தலைவராக விளங்குகிறுர்.

வரலாற்றுப்பகுதியில் உண்மையையும் அவலப்பகுதியில் சிந்தனையின் ஆழத்தையும் கலையினுச்ச நிலையையும் இன்பப் பகுதியில் உள்ளத்தின் மகிழ்ச்சி நிலைகளுக்குரிய கவலையையும் களிப்பையும் கூறி, முழுத் தீங்குடையவரும் முழுநலமுடையவரும் இல்லை என்றும், தீங்கிலிருந்து நன்மை மலர்கிறதென்றும், தீவினையாளர்கள் தீவினையையுணர்ந்து நலம்புரிந்தால் இன்பமுறுவரென்றும் இரக்கம் தான் மன்னிப்பளிக்கும் அருமருந்தென்றறையும் மருமை என்னே!

பிளாட்டோ என்ற பெருமகனார் கூறியவாறு தனிமனிதன் செயலே அவனுக்கு விதியாகிறதென்றும் அச்செயல்பற்றிய எண்ணமும் உணர்ச்சியுமே அம்மனிதனின் பண்பாகிற தென்றுமுரைத்து வாழ்வியலை நாடகத்தில் நவிலுகையில் தனி மனிதனின் எண்ணம், குடும்பத்துடனும்-சமுதாயத் துடனும்-கோவிலுடனும்-நாட்டுடனும் பிணைத்து நேர்மை யாகிய கொள்கையை நிலவ வைக்கிறதென்றார்.

தனி மனிதன் கொள்கைக்கும் அமைக்கப்பட்டுள்ள நிலைக்கும் ஏற்படும் அவலம் விளையும்பொழுது அம்மனித னின் உள்ளுணர்ச்சியின் ஒளி செயலாகி மற்றவர்களைப் பாதிக்கையில் தான் அம்மனிதனின் வாழ்வு காணக்கூடிய தன்மையிலோ அல்லது காணக்கூடாத தன்மையிலோ அமைக்கப்பட்டுள்ளதென்றார். நெடுங்காலமாக நிலவிய ஊழ் என்ற பேகன் கொள்கையை டாண்டே ஒழித்துக் கட்டி தனி மனிதனின் உணர்ச்சி-எண்ணம்-செயல்-உளச் சான்று இவைகளே பண்பு என்றும் வினைக்கேற்ற விளைவு வினையாளனுக்குண்டு என்ற டாண்டேவின் கொள்கை தான் ஷேக்ஸ்பியருக்குச் சாவியாக இருந்தது. விளங்கக் கூறின் எழுச்சி, உணர்ச்சி, எண்ணம், நிலைத்தசெயல், உள்சான்று இவைகள் தாம் உலகில் உருவாக்கும் ஆற்ற லென்றதை அடிப்படையாக்கியே வாழ்வியலை ஷேக்ஸ்பியர் திருந்திய நடையாலும் செழுமிய செய்யுளியலாலும் உவ கையுறவைக்கும் நகைச்சுவையாலும் இயற்கை உணர்ச்சி யாலும், நாடகத்தில் நவின்று நலமுடன் நல்லுலகில் எவரு மெய்தாத உயர் பீடத்தெய்தி கவிகளின் மன்னராக விளங்குகிறார்.

உலகப் பாராட்டல் பெற்றுப் பெரும்புகழெய்தித் தனிச் சிறப்புடன் திகழும் ஹேம்லெட் என்ற நாடகம் ஒன்றே ஒல்காப்புகழை ஷேக்ஸ்பியருக்கு நல்கிற்று. திரு மணம் செய்துகொள்ளும் வயதுடைய ஆண் மகனிருக்க, தலைவனுக்குத் தஞ்சமளித்து, தலைவனின் தம்பியை மணந் தமையும், இதில் உண்மையை யறிய விழைந்தபொழுது தகப்பனின் ஆவி உரைத்ததை ஐயுற்று, உண்மையைச் சிறு நாடகத்தாலறிந்து, அதே மகன் உண்மையும் ஒழுக்கமும் சீலமும் உருவான ஓர் அணங்கைக் காதலித்துத் தழுவி

முத்தமிட்டு, தாய் எதிரில் அவ்வணங்கு காதலனைத் தழுவுகையில் தாயின் வஞ்சகத்தை உளத்திறுத்திப் பெண்கள் காதல் பொய்யெனப் பறைகொட்டிச் சிறிய தகப்பனைப் பழிவாங்கியதின் சித்திரமே ஹேம்லட் நாடகம்.

தாயின் தவருன வாழ்வும்-காதலியின் மெய்க்காதலும் உண்மையையறிய ஆராய்ந்தமையும்-தாயின் தவறுடைய வாழ்க்கையால் உலகை வெறுத்தமையும்-நன்மை தீமையறிய முயன்று உண்மையைக் காணலும் இன்னபிற இந்நாடகத்தின் புதை பொருள் உண்மைகள். இந்நாடகத்தைப்பற்றிய முடிவில்லா ஆராய்ச்சி மாநிலத்தில் திகழ்ந்து வருகிறது.

ஷேக்ஸ்பியரின் உள்ளத்தில் மலர்ந்த பலவற்றுள் சிலவற்றை இயன்ற அளவு தமிழாக்கிக் கீழே கொடுக்கப்பட்டதிலிருந்து இவருடைய பெருமை விளங்கும் :—

(1) காழ்த்த காதலர் இருவரும் பிரிந்து மீண்டும் காணும் வரை அவர்கட்குள்ள கொடிய நிலையை விளக்குகையில் காதலர்களின் பார்வையை உணவுக்கு உவமையாக்கி, பார்க்க முடியாமையே பட்டினி என்று பகர்வதின் பெருமையை விளக்க வேண்டுவதில்லை :—

"நாளை நள்ளிரவுவரை காதல உணவுகொள்ளும்
நம் பார்வைக்குக் கட்டாயம் பட்டினி உண்டாகும்"

(2) உண்மைக் காதலுக்குப் பல தடைகள் உண்டு என்பதை அருமையாக விளக்குகிறுர் :—

"உண்மைக் காதலுக்குத் தடையில்லாத் துறையில்லை"

(3) காதலுக்கும் பயத்திற்குமுள்ள விளக்கம் :

"காதல் அளவைப் பொருத்ததே பயம்
பெருங்காதலுக்குச் சிறுசந்தேகமும் பயம்
சிறுபயம் பெரிதாகுகையில் பெருங்காதல் அங்குவளர்
[கிறது."

(4) காதலன் காதலிக்கு விடுக்கும் காதல் முடங்கல்:

"தூய்மையும் அழகும் உருவான எனது.........
விண் மீனில் அனலிருப்பதில் ஐயுறலாம்
கதிரவன் இயங்குவதில் ஐயுறலாம்
உண்மை பொய்யாவதில் ஐயுறலாம்
ஆனால் ஐயுறாதே யான் உன்னைக் காதலிப்பதில்"

(5) எக்காரணத்தையும் அடிப்படையாகக் கொள்ளாது காதலியைப் புகழ்ந்துரைக்கும் மெய்க் காதலின் கனிவுடை உள்ளக்கிடக்கை :—

"அவள் மீதுள்ள என் காதல் வையகத்தினும் பெருந்தகமை யுடையது ; மதித்தற்கரிது ; அவள் மீதிருக்கும் மதித்தற்கரிய யாவும் என் காதலுக்கு மிகவும் தாழ்ந்தவைகளே ; அவளுக்குரிய உயரிய வாய்ப்புகள் யாவும் கவலையற்றவையே. ஆனால் விந்தை எதுவெனின் மாண்புடைய மதித்தற்கரிய மணிகளின் அரசியினுள்ளம் (காதலியினுள்ளம்) இயற்கையால் அழகுற்றிருத்தலால் என் உள்ளம் கவரப்படுகிறது."

(6) காதலனின் காதலையும் காதலியின் காதலையும் விளக்கும் பகுதி :—

"எனக்கிருக்கும் எல்லை கடந்த காதலால் என்னுள்ளம் விரைந்து துடிதுடிப்பதைப் போன்று மண்ணகத்திலிருக்கும் எம்மங்கைக்கும் அத்தகைய உள்ளத் துடிப்பிராது ; அத்தகைய பெருங்காதலைத் தாங்கவல்ல உள்ளத்தைப் பெற்ற ஒண்டொடியர் உலகிலில்லை ; ஏனெனில் அவர்களால் தாங்க வியலாது. ஏனெனின் அக்காதல் விருப்பமாகும்-அதன் அடிப்படை காதலைக் கொள்ளாததாகும் - அது திருப்தியளிக்கும் - பின்னர் வெறுக்கவைக்கும் - பகைமையை மூட்டும். என் காதலோ திருப்தியுற வைக்க இயலாது கடல்போன்று அனைத்தையும் விழுங்கும்."

(7) காதலி, காதலனின் பெருமையைக் கூறும் பகுதி :-

"இவ்விளைஞனின் புரையற்ற பெருமை என் விழியில் அருவமாய் ஓடி ஒளிந்ததென்பதை யான் உணர்கிறேன்."

ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் செய்யுள்களும் ஏனைய மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டாலும், ஜெர்மன்

இலக்கியத்திற்குக் கருவூலமா யிருக்கிறதென்பது வெள்ளிடைமலை. இவர் நூல்களில்லையாயின் ஜெர்மன் மொழிக்கிலக்கிய மில்லை.

வாழ்வியலை விளம்ப வந்த ஷேக்ஸ்பியர் உலகை ஓர் அரங்காக்கி அதில் வெளியேறவும் உள் நுழையவும் வாயற்படிகளமைத்து நுழைவதும் வெளியேறுவதும் தான் காண முடிகிறதென்றும் ஆண்களையும் பெண்களையும் நடிகர்களாக்கி எழுவகையாகப் பிரித்து, அணங்கிடத்து வளரும் குழவிப் பருவத்தையும்—பறவை போன்று மகிழ்வுடன் பறந்து மனமில்லாமல் நத்தைபோல் மெள்ள பள்ளிக்குச் செல்லும் பருவத்தையும் - அவலமாம் காதலின் கலக்கப் பருவத்தையும் - போர் வீரனைப்போல் உறுதிகொண்டு பதவிப் பற்றுக்காக மரணவாயிலிருப்பினும் நீர்க் குமிழியாகிய பெருமைக்குச் சண்டையிடும் பருவத்தையும் - நீதிக்காகவும் மெய்யறிவுக்காகவும் சிந்தனை செய்யும் பருவத்தையும் - மெலிந்து நலிந்து முதுமை எய்தி நடுங்கி மனித ஒலி குழந்தை ஒலியாகும் கிழப் பருவத்தையும் - கடைசியில் அனைத்தையுமறந்து ஒன்று மறியாத அவலமாகிய இறுதி நிலையையும் விளக்கி மக்களுக்கு வழிகாட்டும் உயர்வு என்னே!

உலகாண்ட உரோம நாட்டுக்கு இலக்கிய மில்லாப் பெருங் குறையை யகற்றி அரசியலால் உலகாண்டதை யொக்க டிவைன் காமெடி என்ற பேரிலக்கியத்தையாத்து குன்றாப் புகழைத் திகழவைத்து இலக்கியத்தால் உலகையாளும் பெற்றிமை எய்திய மாகவி டாண்டேவும், கீழ்ப் புலத்தில் கனிவுறும் கலையியலுக் குறைவிடமான கன்னித் தமிழகம் கடல் கொண்ட பின்னர் முத்தமிழ்க் கலையியலைச் சிலப்பதிகாரத்தில் சிறப்புடன் சிறக்கவைத்த இளங்கோ அடிகளும், ஆங்கில மொழிக்கு இலக்கியக் கருவூலமாயிலங்கி வையகத்திலின்றளவும் எவராலும் போட்டியிட இயலாது இருநூற்று முப்பத்தாறு பாத்திரங்களைக் கூறித் தனிப்புகழெய்திய ஷேக்ஸ்பியரும் வையகத்தில் குன்றாப் புகழெய்தி இலக்கியப் பிழம்புகளாக இறவாத் தன்மையராய் இலங்குகிறார்கள். வாழ்க முப்பெருங் கவிகள்!

புலவர் தொழில்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

உலகின் கண் பிறவிப் பெரும் பயனெய்த விழைவோர் புலன் மன மாட்சிமைகட்குரிய உயிர்ப்பு மிக்க இயற்கைப் பொருள்களையே பயன் படுத்தி அவை மூலம் மெய்யறிவு—மெய்யின்ப நிலையினை மேற் கொள்ளுதலில் தலைப்படுவர். மனனும் புலனும் மாண்பு நிலை யுறுதற்குரிய புறப் பொருள்களில்லையேல், யாங்கும் வாழ்வும், பிறவியும், பொற்புடைய நெறியுமில்லை. இதனானே உலக வியற்கையில் படிந்த முது தமிழ் மாந்தர் உயிர்ப் பியல்பு நிறைந்த இயற்கைப் பொருள்களையும் நெறிகளையும் அவ்வவற்றின் நிகழ்ச்சிகளையும் ஆழ்ந்து முனைந்து நினைந் துணர்ந்து அகம் நெகிழ, உலகத்து இயற்கைப் பொருள்களின் படைப்பு முறைகளையும், பல்லுயிர்த் தொகைகளின் இயல்பினையும், இம்மை மறுமைப் பயன்களாகிய பேருண்மைகளையும் எளிதில் கண்டுணர்ந்தனர். இங்ஙன மெல்லாம் அறிவு உணர்வு வழி மெய்ம்மை தெளிந்து தமிழ் மக்கள் நல் வாழ்க்கைத் தெளிவுடைய நாகரீகராய்த் தமிழகத்தில் நிலவித் திகழ்ந்தன ரென்பது திப்பிய நூலாகிய தொல் காப்பியத்தின் மெய்ம் மொழிகளானே இனிதுணரப்படும்.

வாழ்க்கைத் துறைகள் யாவையும் ஆய்ந்து நுண் பயனைக் கண்டு தெளிந்து மெய்யுணர்வு கைவரப்பெற்ற ஆசிரியர் தொல்காப்பியர், உலக வியற்கையில் மக்கள் தம் கருத்தூன்ற இயற்கைப் பொருள்களையும் அவைகளின் வன்மை மென்மைகளையும், வழக்காறுகளையும். அரிய கருத்துக்களையும் தம் நூன் முழுதூம் கிளந் தோதி மன வறிவு புலன் வழிச் சென்று பொருளியல்புணர்த்தும் பெற்றியைத் திட்ப நுட்ப முற விளக்கிப் புலனும் மனனும் மாட்சியுறும் மாண்பு நிலையினை நிறீஇயினர்.

ஆசிரியர் தொல் காப்பியர் தம் இயல் நூலில், உலகியலுக்கு அடிப்படையாக உள்ளன உலக வழக்கும் செய்யுள் வழக்குமென வுணர்த்தி, உலகப் பொருள்கள் பாடலுட் பயின்றவை என்றும், அவை முதல், கரு, உரிப் பொருள்கள் என்ற வகையில் முறை சிறந்தன என்றும், விளக்கி, முதல், கரு உரிப் பொருள்கள் யாவும் அகமும் புறமுமான இயற்கை முறையிலே அடங்கு மென அறிவுறுத்துவா ராயினர். உலகத்தின் இயற்கை நிகழ்ச்சியாம் வழக்கம் உயிர்ப்புடன் அறியத்

தோன்றிப் பின்னர் நெறிபட வழங்க, அவ் வழக்கு மனித வாழ்விற்கு அரண் செய்யச் சொல்லோவிய நிலையில் செய்யுள் உருவாய் அமையவே, அஃது சொற்களிலும் கருத்துக்களிலும் நன்கு பிணிக்கப்பட்டு இசை யுறச் செய்யுளில் பயின்று வரும் மரபினை இயல்பா யெய்தியது. இதனுனே தொல் காப்பியத்தின் வழி யெழுந்த சங்கச் செய்யுட்கள் யாவும், முதற் பொருளும் கருப் பொருளும் உலகியற்கை தெரிக்கும் புற மெனவும், உரிப் பொருள், புறத்தின் உள் ளியற்கையைத் தெளிய வுணர்த்தும் அக மெனவும் கொண்டு திறனுற யாக்கப் பெற்றிருத்தலை உள்ளுங்கால் பண்டைச் சங்க காலத்து வாழ்வியல் முறையின் அடிப்படை தெற்றெனப் புலப்படும்.

உலக வழக்கும் செய்யுள் வழக்கும் வேறுபாடுளது போல் தோன்றிடினும், அவை ஒன்றோடொன்று உயிரும் உடலும் போன்று பற்றிப் பின்னி யிருத்தல் வேண்டுமே யல்லாது வேறு வேருய்ப் பிரியின் பயனிலவா யொழியு மென்பதை நன் குணர்ந்த நற் றமிழ்ச் சான்றோர், தமிழ்ச் செய்யுள் வழக்கு, உலகியல் வழக்கினைத் தம் முயிர் நிலையாகக் கொள்ளும் மரபு வாய்ந்த தெனப் புலப்படுத்தினர். இதனுனே பழந் தமிழ்ச் சான்றோர் யாத்த பாக்கள் யாவும் இஞ் ஞான்றும் உரு வெழிலும் நறு மணமுங் கொண்டு இனிமை நலனும் வளனு முற்று இயற்கை மாட்சியுடன் நிலை பெற்று வழங்குவது கருத்திற் பதிக்கற் பாற்று. எனவே கூர்த்த நன் மதி நுட்பத்தா லெழுந்த செய்யுளென்னும் புல னெறி வழக்கம் உலகியல் வழக்காய் இயங்கி, வாழ்க்கைத் துறைகளில் வீறுட னிலங்க உலக நடை உயிர்ப் பாற்றல் கொண்டு உறு பய னளிக்கு மென்பதூஉம் அஃதே தமிழ் நன் மக்கள் பால் திகழ்ந்த மெய்த் தலைப் பட்ட வழக்கென்பதூஉம் தமிழி லக்கண முத னூலாகிய தொல் காப்பியத்தின் கண் இனிது விளங்குவது உணரற் பாலதே.

உலக வழக்கினைச் சார்ந்து வரும் மாசினை நீக்கி விழுப்பமும் சுவையும் உயிர்ப்பும் தோன்றச் செய்யுளியற்றும் அறிவு சான்ற பெரு மக்களது புல னெறி வழக்கங்கள், மக்களது பகுத்துணர்வைக் கிளர்ச்சியும் இன்பமும் வீறிட்டு மிளிர வைத்து அவர்களை மேதக்க வாழ்க்கையின் கண் நெறிப் படுத்தூஉம் சான்றாண்மைக்குப் பொன்னுரை கற்கள் போன்று விளங்கி வையகத்தாரை வாழ் வாங்கு வாழ்விப்பன வாகும். எனவே வாழ்க்கையின் கண் ஒளியுடைய ராவர் உலக வியற்கையில் பயின்று செய்யுட் செய்யும் செந் நாப் புலமை நிரம்பிய பெரு மக்களாவர் என்பது பெற்றாம். மக்கள் ஒளியோராய்த் திகழ் தலுக் குற்ற காரணம் யாதெனின் அஃது அன்னூர் தம் புறப்

பொருட் பயிற்சியே யாகும். இஃது அவர தறிவை ஒளி வலி யுடைய தாக்கி அக வுணர்வினு ளாழ்த்தும். இப் புறத் தறிவின் பயிற்சியும் அகக் கருத் தாழ்தலும் ஒருங்கே அமையா விடின் மக்க ளறிவு மாண்புடைய தாகாது. ஆகவே புல னறிவின் துணையுடன், புறத்தே விளங்கும் உல கியற்கைப் பொருள்களை அகத்தே கல்லி ஆழ்ந்தும் ஆய்ந்தும் பயிலலே புலமை யாகும். எனவே புறப் பொருள்களின், கண் கவர் இயல்புகளை அறிந்து அவைகளின் அழகில் நன்மையினைக் காணும் புறத் தொழில் அறிவும் அகத் தினிமையின் உணர்வு மொருங்கே யுடையார் தொழி லனைத்தும் புலவர் தொழிலா மென்க.

இங்ஙனம் புறமும் அகமு மாகிய பொருள்களின் துணை வழி, மக்கள் உலகத்தோ டொட்ட வொழுகுங் காலை, அதன் கண் ணின்று வழுக்கி யிழுக்கலாகா வண்ணம் உலகியல் வழக்கினை ஒழுக்கத்தோ டொட்ட யியைத்துப் புலனெறி வழக்காக, நுண் மாண் நுழை புலமாகிய உட் கருவியால் விழை யும் ஒளியோர், செய்யுள் செய்தன ரென்பது கருத் திருத்தற் பாலது. உலக வொழுக்கம் புலவர் தம் உணர் வொளியால் உயர்ந்து வழங்கும் பான்மைய தென்பது ஈண் டுணரத் தக்கது. வாழ்விற்கு ஊன்று கோலாம் இன்னனைய செய்யுட்கள் அகத்து இன்பத்தினையும் புறத்து அறத்தினையும், பொருளினையும் அறத்தின் பயனை வீட்டினையும் கிளந் தெடுத் துரைத்தலான், அவை பயிலும் நுண் ணறிவுடையார்க்கு இன்பஞ் செய்வனவாம். மற்றும் நயந் தோன் றெழுந்த சங்கத்து நறுந் தமிழ்ச் செய்யுட் கள் யாவும் அவை தம்மை யாத்த ஒண்மையாளரது அகம் புறம் என்ற இரு வகை யிழைவி லும் துழாவும் நுழை வுடை நலனுலாய புலமைக் கலைச் செல்வத்தைப் புலப் படுத்துவனவாம். இங்ஙனம் புறப் பொருள்களையும் அக வுணர்வுகளையும் மெய்ம்மையிற் செலுத்தி இயற்கையில் இழைந்து நிகழுமாறு எழும் செய்யுட் களைப் பயிலுந் தோறும், அவை நிலை பெற யாத்துதவிய சான்றோர்கள், இடை யறவால் எத்துணைச் சேய்மைக் கண் ணுள்ளா ரெனினும், அன்னார் அண்மையில் உள்ளவராகக் காண்டல் எளிதாம். மற்றும் அச் செய்யுட்களை நவிலுந் தோறும் ஏற்படும் நயத்தான், அவை யாத்தாரது புலமை யுள்ளத்தே, பயில்வார் மனம் படியுங்காலை, பயில்வார், தன்னை அறியாது உவகை யுற்றும், அவைகளைப் பயிலாது விடுந்தோறும் உள்ளப் பிரித லென்னும் தளர்ச்சியு மடைவது வெளியாம்.

புலக் கண்ணிற் றோன்றிய பொருள்களை உரைக்கப் புகுங் காலத்து எண்ணங்கள் பல தங்கு தடையின்றி தண் ணென் றொழுகிச் செல்ல, தமிழகத்துச் சான்றோர் செய்யுள் யாப்பே

சீரிய துணையெனக் கொண்டு, அச் செய்யுள் வழியே, அறிவுடையனுந் தன்மையாம் புலமையைப் புலப்படுத்துவர். எனவே தமிழ்ப் புலமையினுள், உலகத் தியற்கைப் பொருள்களின் புறநிலையோடு அக நிலையும் கூட்டி அறியுந் தொழிலும், அறிவிக்குந் தொழிலும் அடங்கி யிருத்தல் அறியற்பாற்று. இதனுன் புறப் பொருள்களின் கண் உள்ளத்தைப் பறிகொடுத்து அழகினைக் காணும் தொழிலையுடைய புலவன், அவ் வழகினில் போற்றற்குரிய அன்பினையும் உண்மையாய நன்மையினையும் செம்மையினையும் அமைந்திருத்தலை, மக்கள் உள்ளம் அவாவிநிற்க, எடுத்துக் காட்டும் முற் றறிவ னுகின்ருன்.

நல்லிசைச் சான்ருேரது சீரிய கருத்தாம் உயிர்க்கு உடலாய் அமைந்த தமிழ் மொழிப் புலமை இரு வகைத்து. அவை தெய்வப்புலமை கலைப்புலமை என்பனவாகும். ஐம் புலனுக்கு மேல் ஆருவது புலனுன மனம், ஐம் புல வுணர்வான் பற்றப்படும் உலக இயற்கைத் தோற்றங்களுக்கும், ஆசறு உள்ளக் காட்சி நிகழுதற்கு மிடமாயுள்ளது. உலக இயற்கையின் உள்ளத்தில் அன்பு வழியே இறைவனைக் கண்டு இறை நிலையும் உயிர் நிலையு முணர்ந்து வேட்கை மிகுதி யானே இறை நிலையில் தாமாய தன்மையில் இன்புற்றுத் தம் வய மிழந்தார் இயல்பாக இசைப்பது யாவும் தெய்வ மண முடையன. இஃது அருண் மிக்க பெரும் புலமை நலஞ் சான்ற பெரியோர் வாய் மொழிகளிற் காணப் பெறின், அஃதே உலகம் போற்றும் தெய்வப் புலமை யாகும். உள்ளத் துணர்ச்சி பன் மடங்கு விரிந்து கண் கூடாகச் சிறக்கா விடத்து இத் தெய்வப் புலமையின் எழில் நலம் குன்றும். புலமை எழில் நலம் யாவும் சொற் றிறத்திலும் பொருள் நலத்தினு மடங்கும். சொற் றிறமாவது புலமை மாண்பு. இஃது உயிரு முடம் பன்ன உள்ளத் துணர்வோடு பொருந்தும் இயைபு வாய்ந்தது. பொருள் நலமாவது பொருட் பரப்பினது நிலையும் பொரு ளாழத்தின் நிலையும் தெற் றென உணர்ந்து கொள்ளக் கூறும் முறைமையா மென்க. இவ் விரு நலங்களின் தன்மையை உணருந் தோறும் பெரு வாழ்வினை அளிக்கும் உள்ளக் கிளர்ச்சியும், நினைக்குந் தோறும் ‘ஊனினை யுருக்கி யுள் ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச்’ சொரிந்தபடி செல்லும் எல்லையி லின்பம் வழியும் புலப்படும். சிற்றளவின வாகிய சொற் ருெடர்களானே, சீரிய எண்ணத்திற்குத் தக நிலையுடைய செயல், உரு, அருளி, செம் பொருள் பயக்குமாறு புலமைக் கல்வியாளர் எதுகை மோனை கருதாது தானே தன் மயமாய் நின்ற நிலையிலே அருவி யன்ன செய்யுளை யாப்பதினுன், அவர் தம் நாவியன் மொழி, மலரிற் பொருந்திய விரை யெனப்

பொலிந்து, வாய்மையின் வழித் தாய மன நலத்தையும் பண்புடைய ஒழுக்கத்தையும் அளிக்கும் இயல்புடையது. இஃது புலமைக் கல்வியிற் பெரியாராய கம்பர் கூறியாங்கு 'உயிருருக்கும் புக்கு உணர்வு உருக்கும்: உடலத்தி னுள்ள செயிருருக்கொண்ட நந் தீங் குருக்கும்.' மன மாசு தீர்த்து சிந்தை சொல் செயல்களை அமைவுறச் செய்து இன்பம் பயக்கும் கவிதையைப் பற்றி, உள்ளத் துணர்வுக்குச் சொல்லோட்டம் கொடுத்த கவிவாணர் ஃப்ரான்சிச் தாம்சன் (Francis Thompson)

தனித்த உயிர் தன் தண்ணிய குடுமிவாய்
பனித்த நறுங் காரால் பரிவுடன் நனியே
சண்ட வேகங் கொடு சார்ந்த நற்கவியாம்
எண் பெரும் அருவி இலங்க வீழ்ந்திடுமே.
போரின் முழக் கை எதிரொலி காட்டும்
சேர் மலைக் குகை போல் செறிந்த மனக்
கோட்டைவாய் கோல மின் னொளித் திரள்கள் குறியுடன்
ஈட்டங் கொண்டு இன்புறத் தோன்றின.
தனித் தனி குடுமி தன்னி விருந்தும்
கனிந்த கனிவு ஆயிரம் இன் பொனி
*பாந்து நிறைந்து பாங்குறப் பொலியும்.**

என பெருவியப்பும் விம்மிதமும் தோன்றத் தம்மை மறந்து மொழிவாராயினர். சொற் பொரு ளினிமை பெற்ற கவிதை, தெய்வத் தன்மையான தொன்றே யாயினும், அது ஊடுருவி நிற்கும் உண்மைப் பொருளின் அழகினைப் பற்றி, ஆக்கும் உணர்ச்சி நிலையினையும், ஊக்கும் ஒழுக்க நிலையினையும் கூட்டுவித்து அதனில் படிகின்றுரை உணர்வுச் சூழலில் இயங்கச் செய்ய வேண்டும்.

இன்னணம் கவிதை மூலம் தம் சீரிய மனத் தோற்றத்திற்குரிய உரு வளித்து அறி வொளி காட்டி அதனைப் புவியின் கண் நிலை நிறுத்துதலான், புலமைத் தொழிலுடையார் படைத்தற்றொழிலையுடைய அயனை ஒரு வாற்ருன் ஒப்ப ரென்பர் புலனழுக் கற்ற தமிழ்ப் புலமைச் சான்ருேர். படைக்கும் ஆற்றல்

---

* From cloud-zoned pinnacles of the secret spirit
Song falls precipitant in dizzying streams ;
And, like a mountain-hold
When war-shouts stir it.
The mind's recessed fastness casts to light
Its gleaming multitudes, that from every height
unfurl the flaming of a thousand dreams.
(Sister songs-Thompson)

இருவர் பால் ஓரோ வழி பதிந்திருப்பினும், புலவர் தம் படைப்பு, மடமையும் மருளும் மயக்கமும் தியக்கமும் பொருந்தி இறைக் கணத்தே அழிதன் மாலையதாகிய அயன் படைப்புப் போலல் லாது உயிர் வனப்புடன் உணர்வு வளனும் உலவாது பயக்கும் இன்ப நலனும் அறிவு சான்ற தெளிவும் அருளும் சுரந்து என்றும் அழியாது நின் றிலங்கும். கண்ணுள் ஒளி போலக்கலை யறிவில் கனிந்து விளங்கும் புலவர் பெரு மக்கள் இம் மண் ணகத்தே அயனையும் விஞ்சி மருவி யுள்ளார். புலவர் படைப்பன யாவும் மலரவன் படைப்பது போலல்லாது பொன்றுத தன்மை யுடைய தாதல் பற்றி, புலவர் தொழிலின் சிறப் பியல்பை சீர் தூக்கி ஆய்ந்த ஞான்று, புலவர் தொழிலைவிட, அயனது படைத்தற் றொழில் தண்மை கொண்ட தொழிலே யாமென லாம். எனவே இறவாத் திருவளர் ஆக்க முடைய புலவர் தம் வாக்கானே பல்லுயிர் படைப்பு நடை பெறுகிற தென்பதூஉம், மதி நுட்ப முடைய புலவர் படைப்புக் கடவுள ரென்பதூஉம் சற்றும் மறக் கொணுத தென்க. இத் தகைய தெய்வப் பெற்றிமை வாய்ந்தார் தம் ஆணை வழி உலகியல் நடை பெறு மாதலின் பண்டைப் புலவர்கள் ஒன்னுர்த் தெறலும், உவந்தாரை யாக்கலும், வேண்டிய வேண்டி யாங் கெய்துதலு முடைய உர னுற்றும் விளங்கின ரென்க. முறையாற் செறி வுறும் இத் தகைய ஆற்ற லுடையார்க்குக் கூற்றங் குதித்த லுங்கைகூடு மென்பது கருதற் பாலது.

உலகத்துப் பருப் பொருள்களைப் புறக்கண் காணுங்காலை அப் பொருள்களின் நுண் இயல்பையும் மெய்ம்மையையும் திட்ப நுட்பங்க ளமைய ஆழ்ந்து அறிந்து தெளிதற்கு அகக் கண் இன்றி யமையாது வேண்டப்படும். புறத்தே புல னுகாத நுண் பொருளை எளிதே வாழு முயிர்க்கு விளங்க வைப்பது கல்வி யாகும். பேரிருளகற்றும் நீணிலக் கைவிளக்கு கற்றறி வுடைமை எனப் படுவதினுன், கல்விக்குப்பயன் அறிவுடைமை என்பது போதரும். உண்மையாய கல்வி மக்களாய்ப் பிறந் தாரை அறி வின்பம் நல்கி இருமை நலங்களும் அளித்து ஒளிய ராக்கும். ஆனுல் அவ் வறிவு புறப் பொருட் பயிற்சி முறை யானும் அக னுணர்வி லழுந்தும் வகையினுனும் அகல முற்று விளக்கமும் ஒளி வலியுமுடை யாதாயின் அஃது மாண்புருது இழுக்குறு மென்பது கண் கூடு. இது காறுங் கூறிய வாற் ருல், புறத்தே யுள்ள உலகியற்கைகளைப் புல னறிவு கொண்டு அகத்துளே ஆய்ந் தாழ்ந்து பயில லென்பது புலமை யென் பதூஉம், அகத்தே கல்விக் கல்வி ஆழ்ந்து மெய்ம்மை தெளிதல் கல்வி யா மென்பதூஉம், புலமைக் கல்வியே வாழ்க்கையின் கண் மக்களை ஒண்மை யாள ராக்கும் கருவியாமெனும் பேருண் மையும் பெற்ரும். (தொடரும்.)

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

மனச்சாட்சி.

இவ் வுலகின்கண் நிகழ்வனவற்றில் நன்மை பயக்கும் செயல் இவை, தீமையுடைய செயல் இவை என்று மனக் கண்ணால் கண்டு பகுத்துணரும் ஆற்றலையே மனச் சாட்சி என்று பகர்வர் மேலோர்.

இவ் வாற்றல் எல்லா மக்களுக்கு மிருப்பினும் அன்பு, அருள், உண்மை, நடுவு நிலைமை, கடவுள் வழிபாடு ஆகிய வற்றைக் கடைப்பிடித்து நன்னடையி லொழுகும் சிறந் தோர்க்கே தம் செயல்கள் குற்ற முடையனவா, இல்லையா என் ஆய்ந்து நடக்கும் இயல்பு உண்டாகும். மற்றையோர்க்கு இருளில் நிறைந்த பொருள் விளங்காதிருத்தல் போலத் தெரியா.

மேற் கூறியவாறு தன் செயல் ஒவ்வொன்றையும், ஆராயின் ஒருவன் மன்னுயிர்க்குக் கேடு சூழுமோ? சூழா தென்க.

பிற வுயிரின் துன்பங் கண்டுழி இரக்கமும் நடுவு நிலைமையும் நன்மை தீமைகளைப் பகுத்துணரும் ஆற்றலும் பெற்றுழி மன விளக்கு மாசறத் தெரிவதோடு அவ் வொளியி னால் அறியாமையாகிய இருள் தானே சென்று மறையும். இந் நிலை பெற்றவன் எக் காரியத்தையும் ஆராய்ந்தே செய்ய முற்படுவான். ஆனால் இந் நிலையைச் சிறிதும் உணராதவர்கள், நோய் அணுக்களையும் பரவுவதையும் நன்கு ஆராய்ந்த வைத்திய அறிஞன் தொத்து நோயுள்ள காலங்களில் மக்கள் கவலையின்றி வாழவும் இவன் மாத்திரம் கை கால், உடை தண்ணீர் உணவு ஆகியவற்றைப் பயன் படுத்த சிறந்த முயற்சிகள் பலவற்றைச் செய்வதைப் பார்த்துக்கொண்டிருந்த பாமரன் பரிகசிப்பதைப் போல் சிறு சிறு காரியங்களையும் நன்மை பயப்பனவா? தீமை பயப்பனவா? என்று மனத்

தின் நாடும் பெரியோரை மற்றையோர் இதற்கு இவ்வளவு நேரமா? என்று எள்ளி நகையாடவும் செய்வர்.

(1) 'தன்னெஞ் சறிவது பொய்யற்க'

(2) 'நெஞ்சத்துக் கோடாமை சான்ருேர்க் கணி'

என வள்ளுவர் வகுத் துரைத்துள்ளார். தூய மனமே உணர்த்த உணரும் பெரியோர்கள் கடந்து நடக்கக் காரண முளதோ? கடக்க முடியுமோ? முடியா தென்க. இனி, நல்லந்துவனுர் மனம் சரியாக நிற்றல் மட்டுமில்லை; நெஞ் சறிந்த தீயவை மறைக்கவும் மறையா? என்றும், திருவள்ளு வர் மன மறிந்தவை மறைத்தால் மனமே சுடும் என்றும் உணர்த்துவர்.

'கண்டவர் இல்லென உலகத்துள் உணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவும் மறையாவாம்
நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாதலின்'

கலித்தொகை—

'தன்னெஞ்சே தன்னைச் சுடும்' பொதுமறை—

என்பனவற்ருல் உணர்க.

ஆகவே, மனக் காட்சி யுற்றவன் மனச் சாட்சியின்படி நடக்கக் கடமைப்பட்டவன் என்பதும், இவ்வாறு நடப்பின் ஆராய்தல் ஏற்படும் என்பதும், ஆராயின் அறியாமை அகலும் என்பதும், அகலவே நடுவுநிலைமை முதலிய நற் குணங்களினுல் மனம் விளக்குப் போல ஒளி விடும் என்பதும், நெஞ் சறிந்த தீயவை மறைக்க இயலா தென்பதும், மறைப் பின் மனமே கரியாக நின்று சுடும் என்று வள்ளுவர் வகுத் துள்ளார் என்பதும் போந்த பொருள்களாகக் கொள்க.

மேலும் மனச் சாட்சியின்படி நடக்கலுற்ருன் தன் குற்றங்களைத் தானே களைவதுடன், 'ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காணும்' ஆற்றலால் அவனின் நிலை பெற்ற உயிர்க்கு இன்னலொன்றும் உண்டாகாது. நலன் அடையும் என்க. இதனை,

'தன்னைத்தன் நெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தான் எய்தா நலனில்லை'

என்ருர் அறநெறிச்சாரம் இயற்றிய முன்னையோ ரென்க.

பொருந்துமா? (அ)

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்.

தமிழ் மொழியின்கண் உள்ள சொற்கள் பல. அவற்றுள் திருக்குறளில் அழுக்காறாமை என்ற அதிகாரத்தின்கண் பத்தாவது குறளாகிய,

"அழுக்கற் றகன்றாரு மில்லை யஃதில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்."

என்ற செய்யுளில் முதற்சீராயுள்ள 'அழுக்கற்று' என்ற ஒரு சொல்லைப்பற்றியே ஈண்டு ஆராய எடுத்துக் கொண்டது.

ஆனால், உலகிலுள்ள புலவர்களிலே தனக்கிணையென ஒருவரைக் கூற முடியாத அரும் பெரும் புலவராகிய வள்ளுவர் இயற்றிய பொய்யாமொழியின்கண் குற்றங் கூற முன் வந்து விட்டார் என்ற எண்ணத்தைக் கொள்ளாது, சொல்லின் நிலையைத் தமிழ் மரபின்படி நடுவுநிலையிலிருந்து ஆராய்ந்து பார்ப்பார் இடையில் கொண்டுள்ள கருத்தின் காரணமாக இச் சொல் இந் நிலையில் மாறுபாடு அடைந்துள்ளது என்பதை எண்ணிப் பெரு மகிழ்வடைவர் என்பது திண்ணம். இதனை உட்கொண்டே வெளியிட விரும்பினேன்.

இந் நூலாசிரியருடைய ஆட்சி :

I. (க) 'ஒழுக்காறாக் கொள்க.........
அழுக்கா றிலாத இயல்பு'

(உ) 'விழுப்பேற்றின்...........
அழுக்காற்றின் அன்மை பெறின்'

(ங) 'அழுக்காற்றின் அல்லவை செய்யார்'

(ச) 'அழுக்கா றுடையார்க் கதுசாலும்'

(ரு) 'அவ்வித்து அழுக்கா றுடையானை'

(சா) 'அழுக்கா றென ஒரு பாவி'

என இவ் வதிகாரத்தின் ஆறு இடங்களில் எடுத்தாண்டிருப்பவையாலும், ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில்,

(எ) 'அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை, ஒழுக்க மிலான்க ணுயர்வு, என எடுத்தாண் டிருப்பதாலும்,

II. மற்றைய ஆசிரியர்கள் அழுக்காறு என்று பெரும் பாலும் சிறுபான்மை (மன) அழுக்கு என்றும் எடுத்தாண்டிருப்பதாலும்,

III. அழுக்கறு என்ற பகுதி யடியாகக் கொண்டு பிற அறிஞர் எடுத்தாளாமையாலும்,

IV. உடன்பாட்டுச் சொல்லைவிட்டு எதிர்மறைச் சொல்லாகிய 'அழுக்காருமை, அழுக்காறு + ஆ + மை என்று பிரிக்க இடந் தந்து ஆள்வதாலும்,

V. சொல்லொடு பொரு ளுணர்ந்தோன், சோதிட நீதி வல் லோன், நல்லறிவாளன் என்று கூறும் மண்டலவன் சூடாமணி நிகண்டின்கண் எட்டாவதாயுள்ள பண்பு பற்றிய பெயர்த் தொகுதியில் 72 ஆவது செய்யுளாகிய 'அன்னோவோடு........அழுக்காற்றின் பேர்—சொன்ன கோனமை கூரஞ் சூழ்ந்திடும் பொறாமை முப்பேர்' என வரையறுத்த இடத் திலும அழுக்காறு என்றே கூறியிருப்பதாலும்,

VI. செய்யுளிலக்கணப்படி ' அழுக்கற் + றகன்றுரு, மாமுன் னிரை, அழுக்காற் + றகன்ருரு, மாமுன் னிரை, என இயற் சீர் வெண்டளையில் பிழையாது நிற்றலாலும்,

VII. பொருள் முறையால் சிறப்புடையதாய் இருத்தலாலும்,

VIII. பரிமேலழகர் அழுக்கறு பகுதியாகக் கொண்டு எழு திய காரணத்தால் நெடில் குறிலாக்கப் பெற்று பின்னோராட்சியில் வந்து விட்டது என்ற உண்மை யாலும்,

"அழுக்காற் றகன்றாரு மில்லையவ் வில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்."

என்று திருத்திய முறையில் கொள்ளுதல் அமையும் என்பதே கருத்தாகக் கொள்க. பொருந்துமா, சிந்திக்க.

(176-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கவிஞர்கள் தம் அறிவுத்திறத்தால், இனிய தமிழ் மொழிகளால் இருபெரும் சம சக்திகளும் நாட்டிற்கு நன்மை பயக்கும் ஆக்க வேலைக்கு பயன்படுமாறு தர்ம சக்திகளாக மாற்றினர். இங்ஙனம் மாற்றப்பெற்ற இருபெரும் சக்திகளும் பொதுப் பணியில் தம் சக்திகளைச் சமமாய்ச் செலவிட்டதாலன்றோ இன்று நாம் நம் நாட்டின் எப்பகுதியிலும் கோவில்களையும் குளங்களையும், ஆறுகளையும், அணைகளையும், கால்வாய்களையும் கழனிகளையும் காண்கின்றோம்.

அடுத்தபடியாக உயிரினங்கள் ஒன்றுபட்டு வாழ அவ்வாழ்விற்கு வாயிற்படியாக அமைந்த காதல்பற்றி நம்மவர்கொண்ட கருத்தைக் கவனிப்போம். உயிரினம் தோன்றிய காலந்தொட்டு அழியும் காலம் வரை எவ்வுயிரிடத்தும் இயைந்துள்ளது காதல் உணர்ச்சி ஒன்றேயாம். ஆனால், இவ்வுயிரினங்களிடம் அடங்கியுள்ள ஆன்ம வளர்ச்சிக்கேற்ப அவ்வுணர்ச்சி வளர்ச்சியடைகிறது என்பது ஆன்றோர் கருத்து. இங்ஙனம் வளர்ச்சியடைந்து வரும் இவ்வுணர்ச்சி பன்னெடுங் காலத்திற்கு முன்பே அறிவில் வளர்ந்து ஆன்ம வளர்ச்சியில் முதிர்ந்த தமிழரிடம் எவ்வாறு வியாபித்திருந்தது என்பதை அறிய அகநானூறைப் புரட்டினால் அது கூறுகின்றது; உயிரும் உடம்பும் ஒன்றுக்கொன்று இன்றியமையாத் தொடர்புடையன. ஒன்று அழியின் மற்றொன்றைக் காண வியலாது. இரண்டும் சம உணர்வுடன் இன்பத்தை மாத்திரமல்ல, துன்பத்தையும் பகிர்ந்து அனுபவிப்பன. இஃதேபோல் தலைவனும் தலைவியும் வேற்றுமையின்றி ஒன்று கலந்து இல்லற இன்ப துன்பங்களைச் சமமாய் அனுபவிப்பவர்கள் என்று அவர்கள் நடத்திய சம வாழ்வுத் தத்துவம் தெளிவாய் எடுத்துக் காட்டுகிறது.

இனி நம் நாட்டு மக்களின் அன்றாட வாழ்வை ஆராய்வோம். நாடோ வெப்பம் மிகுந்த நாடு. ஆண்டிற்கு மூன்று மாதங்கள் போக எஞ்சியது வெப்பகாலம். ஆதலின் தமிழகத்தின் தட்பவெட்ப நிலைமைக்கேற்ப, உண்பது நாழி உடுப்பது இரண்டே என்ற இணையற்ற பண்பாடுதான் யாவர்க்கும் சமமாய் நின்று நிலவி வந்தது. அவர்களின் சமூகசேவையின் அடிப்படைக் கொள்கையை ஆராய்ந்தால் இந்திரர் அமிழ்தம் கிட்டுவதெனினும் இனிது என்று விரும்பித் தாம்மட்டும் உண்ணும் பண்பினரல்லர். பிறர் சேவையில் என்றும் அயர்வடையாமல், தாம் என்றும் முயலாது, பிறர் தம் உழைப்பில் பயனடைய

வேண்டும் என முயன்ற பிறர்க் குரியாளராகவே வாழ்ந்து வந்தனர். இஃதே சங்க காலத்தவர் சமூக வாழ்வின் அறநெறியில் உயிர் நாடிபோன்ற கொள்கை.

போர், போர் என்று ஆர்த்தெழும் வீரர்கள் மலிந்த நன்னுடல்லவா நம் நாடு. ஆதலின் அப்போர்க்களத்தில் எத்தகைய தர்மத்தைக் கடைப்பிடித்தனர் என்பதைப் பார்த்தால் அங்கும் தமக்கு சம சக்தியற்ற பெண்டிர், பிணியாளர், பேடிகள் பால் படைக்கலம் செலுத்திஞரல்லர். மாற்ருன் படைக்கலம் இழப்பின் தன் ஆயுதங்களைத் தவிர்த்துவிட்டு அவனோடு மற்போர் புரியவே முற்பட்டனர், தம் சக்திக்குக் குறைந்தவரோடு போர் தொடுத்ததால் மாற்ருன் புறமுதுகில் புண்பட்டான் என்ற பழிச்சொல் கேட்டு உண்ணுநோன்பு மேற்கொண்டு உயிர்விட்டனர். சம சக்திகளோடல்லாது தமிழன் போர் தொடுக்க மாட்டான் என்பதற்கு இதனினும் சிறந்த எடுத்துக் காட்டுத் தேவையில்லை.

சமதர்ம வாழ்வைத்தான் சங்க காலத்துத் தமிழர் கடைப்பிடித்தனர் என்ற உண்மையே விளக்கும் சிறுகுடி வாழ் பண்ணன் சரிதை யாவரும் அறிந்ததே. சோணுட்டதிபதியால் பசிப்பிணி மருத்துவன் என்ற பட்டத்தைப்பெற்ற அப்பண்ணன் தனக்குடைமையாக, பூஞ்சோலையும், மாந்தோப்பும், நெல்லிக்காவும், விளை புலன்களும் கொண்டிருந்தான். இவைகளின் உடைமை அவனுடையதுதான். ஆனல் அவைகளின் பயனை அனுபவிக்கும் பாக்கியம் யாவர்க்கும் சமம். பயனைப் பலர்க்கும் பகிர்ந்தளித்த பண்ணனின் உரிமையைப் பறிக்க ஒருவரும் முற்பட்டாரில்லை. அதற்கு மாருக அம்மண்டலாதிபதி கிள்ளிவளவன் தன் வாழ் நாளையே பண்ணனுக்கு உரிமையாக்கத் துடித்தான்.

இங்ஙனம் சம உணர்வுகொண்டு வாழ்ந்த சங்க காலத்தவர் எங்ஙனம் தங்கள் வாழ்க்கையை நன்கு உணர்ந்து நெறிப்படுத்தியிருந்தனர் என்று நோக்கினல் அதற்கருமையான சான்று கிடைக்கிறது. அதுதான், யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர் தர வாரா; ஆகலின், மாட்சியிற் பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே என்பது. இவ்வரிய மொழிகள் நலிவுற்றுவரும் நம வாழ்வைச் செம்மைப்படுத்த உதவுமா?